செ.வெ.எண்: 16/2021 நாள்: 08.03.2021

**திருப்பூர் மாவட்டம்**

**தமிழ்நாடு சட்டமன்ற பொதுதேர்தல்-2021 பயண்படுத்தபுபடவுள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் First Randomization செய்யப்பட்டு சட்டமன்ற தொகுதிகளுக்கு ஓதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.க.விஜயகார்த்திகேயன் இ.ஆ.ப., அவர்கள் தகவல் !!!**

திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், இன்று (08.03.2021) தமிழ்நாடு சட்டமன்ற பொதுதேர்தல்-2021 பயண்படுத்தபுபடவுள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் First Randomization செய்யப்பட்டு சட்டமன்ற தொகுதிகளுக்கு ஓதுக்கீடு செய்யும் பணி அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியினர் முன்னிலையில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.க.விஜயகார்த்திகேயன் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

நடைபெறவுள்ள தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல்-2021 தொடர்பாக, திருப்பூர் மாவட்டத்தில் உள்ள 8 சட்டமன்ற தொகுதிகளுக்குரிய மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் (EVMs & VVPATs) பல்லடம் மற்றும் திருப்பூர் (தெற்கு) வட்டாட்சியர் அலுவலக பாதுகாப்பு கிடங்குகளில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. மேற்படி, மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை சட்டமன்ற தொகுதிகளுக்கு ஓதுக்கீடு செய்யும் பொருட்டு, திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாவட்ட தேர்தல் அலுவலர் அவர்கள் தலைமையில் இன்று 08.03.2021 (திங்கட்கிழமை) காலை 11.30 மணியளவில் First Randomization கணினி மூலமாக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியினர் முன்னிலையில் நடைபெற்றது.மேலும் First Randomization செய்யப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களின் பட்டியல் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியினருக்கு வழங்கப்பட்டது. First Randomization செய்யப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள், வட்டாட்சியர் அலுவலகம் பல்லடம் மற்றும் திருப்பூர் தெற்கு அலுவலகத்தில் உள்ள கிடங்கிலிருந்து (Wharehouse)நாளை 09.03.2021 (செவ்வாய்கிழமை)திருப்பூர் மாவட்டத்திற்குட்பட்ட எட்டு சட்டமன்ற தொகுதிகளுக்கும் பிரித்து அனுப்பப்பட்டு பாதுகாப்பு அறைகளில் (Strong Room) வைக்கப்படவுள்ளது என திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.க.விஜயகார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வின் போது, மாவட்ட வருவாய் அலுவலர் திரு.கு.சரவணமூர்த்தி, தாராபுரம் சார் ஆட்சியர் திரு.பவன்குமார் இ.ஆ.ப., தேர்தல் நடத்தும் அலுவலர்கள், தேர்தல் வட்டாட்சியர் திரு.ச.முருகதாஸ் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியினர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.**